இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் 2006
தொடர் மதிப்பீட்டு பரீட்சை 1 மட்டம் 3
LWU 1412 – சட்டமுறைமை
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 05.09.2006 நேரம்: மு.ப 11.30 - மு.ப 12.10

ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. பிரசித்தி பெற்ற சட்டத்தரணி ஒருவரான திரு. கமகே கணினி குற்றம் தொடர்பான வழக்கொன்றை அண்மையில பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் தனது புதிய உதவியாளரான பிரியந்தவிடம் இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்டுள்ள சட்டங்கள், மற்றும் இது தொடர்பான தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவற்றை தேடிக் கண்டுபிடிக்குமாறு வேண்டினார். மேலும் இளைப்பாறிய நீதிபதி ஒருவரால் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் ஒன்று கட்டுரை ஒன்றில் விமரிசித்து பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது எனவும் அந்தக்கட்டுரையை தேடிக் கண்டு பிடிக்குமாறு பிரியந்தாவிடம் கூறினார்.

(அ) திரு. கமகேயினால் கேட்கப்பட்ட தகவல்களை சேகரிப்பதற்கு எவ்வாறான சட்ட புத்தகங்களை பார்க்க வேண்டும் என்பது தொடர்பில் பிரியந்த உமது ஆலோசனையை நாடுகிறார். பிரியந்தவுக்கு ஆலோசனை வழுங்குக. இந்த புத்தகங்களின் இயல்பு மற்றும் முக்கியத்துவத்தை பற்றி சுருக்கமாக விளக்குக.(மாணவர்கள் சட்ட புத்தகங்களை பற்றி மாத்திரம் ஆராய வேண்டும். கணினி குற்றம் தொடர்பான அறிவு எதிர்பார்க்கப்படவில்லை).

(14 புள்ளிகள்)

(ஆ) சட்டத் தொழிலில் இருக்கும் பிரியந்த போன்ற நபர்களுக்கு முக்கியத்துவம் பெறும் வகையில் தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ள அல்ல தகவல்களை சேகரித்து வைத்துக்கொள்ள ஏதேனும் தொழில்நுட்பசார் கண்டுபிடிப்புகள் உண்டா? உமது விடையை விளக்குக.

(6 புள்ளிகள்)

2. 'ஆரம்ப காலத்தில் நீதிபதிகள் மிக அரிதான சந்தர்ப்பங்களில் விருப்பமற்று நியதிச்சட்டத்தில் இருக்கும் சொற்களுக்கு சொற் பொருள்சார் விதியை பிரயோகிப்பதில் இருந்து விலகிச்சென்றனர். ஆயின் இன்றைய நீதிபதிகள் தீர்ப்பொன்றினை வழங்கும் போது நியதிச்சட்டமொன்றின் சொற்களை விட நியதிச்சட்டமொன்றின் நோக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குகின்றனர்'.

மேற்கூறப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? பிரயோகத்தில் களிவு பொருள் கோடல் விதிகளின் துணையுடனும் இயைபான தீர்ப்புச்சட்டங்களுடனும் உமது விடையை விளக்குக.

(பதிப்புரிமை பெற்றது)